821

REGD. No. M. 2913.

ஆர்யதர்மம்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

சந்தா விபரம்.
[தபால் செலவுள்பட]

ஜீவிய சந்தா ...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா ...	ரூ. 3
ஆறுமாத சந்தா ...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணா
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம-௵ ஐப்பசி-மீ 29உ 1940-௵ நவம்பர்-மீ 14உ | ஸ-44

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

பழைய பத்ராதிபர்! நமது ஆர்யதர்மம் ஸஞ்சிகை வடிவமாக வெளிவந்த காலத்தில் பத்ராதிபராக இருந்து பல க்ரந்த கர்த்தாவும் கவியாயும் விளங்கிய ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் இறைவனடி சேர்ந்தார். நிஷ்கபடமான ஸ்வபாவமுள்ள மஹநீயர்.

உத்ஸாஹப் படுத்தல் அவச்யமே! மதுரை தேசிகபக்த ஸபையின் 9வது ஆண்டு விழா [illegible] தருந்த பட்டமளிக்கப் பட்டது. இத்தகைய வேலை பல வகையிலும் மதப்ரசாரத்திற்குப் பெருந் துணையாகும். ஆனல் ஸபைகள் சிபார்சு செய்து அந்தந்த மடத்து ஆசார்யாள் வியாஸபூஜா காலத்தில் பட்டமளிப்பதென்ற ஸம்ப்ரதாயமிருந்தால் நலம்.

மாணவருக்கு எச்சரிகை! தேசீய விஷயமாக வேலை நிறுத்தம் செய்யும் மாணவர் செயல் சென்னையில் அருவருக்கத் தக்கதாயிருந்தது. அரசாங்கம் அத்தகையவர்களுக்குச் செய்த எச்சரிக்கை வரவேற்கத் தக்கதே

ரூஸ்வெல்டின் வெற்றி! மூன்றும் முறை தலைவராக நிற்ககூடாதென்ற வழக்கத்தை மீறி நின்று 4 லக்ஷம் அதிக வாக்குகளால் இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். இந்தியாவைப் போலில்லாமல் அவரவர் ஸ்வேச்சையாகவே வாக்களித்திருந்தால் அவரிடம் அதிக நம்பிக்கை இருப்பதாகவே பொருள். போரை நிறுத்த முயல்வரா?

உண்மை என்ன? டிஸம்பர் மாதத்தில் ஊர் பேர் தெரியாத பல ஸபைகள் நடப்பது வழக்கம். ஆனல் அந்தந்த ஸபை அபிமானிகள் அதை ப்ரஸித்தமாகவே பண்ணுவர். உண்மை நாடுவோர் ஸபையென்று சென்னையில் நடத்தப் போகிறாம் தலைவி மயூர் பஞ்சமஹாராணி, வழக்கம்போல் நமது தலைவர் ஸ்ரீ கே. எஸ். ஆர். சாஸ்திரிகள் பெயரும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நமது ஸபை தூங்கலாகாது!! வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தைத் திருவிடமருதூருக்கு அழைத்த நண்பர்கள் ஊக்கத்துடன் வேலை செய்ய வேண்டும் நாளதிகமில்லை. வேறு தர்ம கார்யத்திலே ஈடுபட்டிருந்தாலும் வர்ஷத்திற்கோர்முறை நடக்கு மிச்சபையை உதாஸீநம் செய்யலாகாது.

பத்ரிகைக் கனுகூலம்!! புக்போஸ்ட் சார்ஜை அதிகப்படுத்தாமலிருக்கும்படி அரசாங்கத்தை வேண்டுகிறோம். பத்ரிகை ஓர் கல்வி ஸம்மந்தமானது. அதே போல் அச்சிட்ட விளம்பராதிகளும் பொதுவாக உபயோகப் படக்கூடியது. ஆதலால் அதை ஏற்றுவது அழகல்ல.

[illegible] பத்ரிகைக்காரர்களது [illegible] லிமெண்ட் அங்கத்தினர் செயல் இரண்டும் பயன் தருமா?

'உத்யோகம் கொடுக்க மாட்டோம்'

மாணவர்களுக்கு எச்சரிக்கை

ஸமீபத்தில் நேரு தண்டனை முதலியவைகளை முன்னிட்டு சென்னை மாகாணத்தில் பல பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து பள்ளிகளுக்குப் போகாமலிருந்ததுடன் ஊர்வலமும் நடத்தினர்கள்.

இம்மாதிரி மாணவர்கள் ஸர்க்கார் முறையைக் 'கண்டிப்பதற்காக வேலை நிறுத்தம் செய்வதை கவர்ன்மெண்டார் ஆக்ஷேபிக்கிருர்கள்.

இந்தக் கிளர்ச்சியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு ஸர்க்கார் உத்யோகம் கொடுக்கப் படமாட்டாதென்று கவர்ன்மெண்டார் எச்சரித்து அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள்.

உபவாஸமில்லையாம்

காந்திஜி பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்து உபவாஸஹடம் செய்யப் போவதாக பறைய்டிக்கப்பட்டபடி நடக்காதாம், பலர் வேண்டுகோள்படியும், ஸந்தர்ப்பத்தை அநுஸரித்தும் ஷை உபவாஸம் தத்காலம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக காந்திஜியே கூறுகிருர்.

புதிய பத்திரிகைச் சட்டம்

வாபீஸ் பெறப்பட்டது

பத்திரிகைகளுக்கு யுத்தச்செய்தி விஷயமாகச்சில நிபந்தனைகள்விதித்துச் செய்யப்பட்ட அவஸரச் சட்ட விதியானது கவர்ன்மெண்டாரால் வாபீஸ் பெறப்பட்டது.

பத்திரிகை ஆசிரியர்களின் மஹாநாடு டெல்லியில் நடந்ததில் இவ்விஷயமாகத் தீர்மானங்கள் செய்யப்பட்டன. [illegible] அதன் மேற்பார்வையில் யுத்த விஷயமான செய்திகளை பிரசுரிக்க பத்திராதிபர் ஸம்மதித்ததை ஏற்று ஸர்க்கார் மேற்படிச் சட்டத்தை ரத்து செய்தார்கள்.

குடந்தையில் ஹர்த்தால்

பெரிய பொதுக்கூட்டம்

தண்ணீர்—சாக்கடை வரியை ரத்து செய்ய கோரிக்கை

கும்பகோணத்திற்குத் தற்காலம், தண்ணீர் சாக்கடை வஸதிகள் செய்துகொடுக்க முடியாதென்று ஸர்க்கார் சொல்லிவிட்டதைக் கண்டிக்கவும், உயர்த்தியுள்ள ஷை வரிகளை ரத்து செய்யும்படி கேட்கவும் சென்ற வெள்ளிக்கிழமை பரிபூர்ண ஹர்த்தால் நடந்தது. பெரிய ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடந்தன. உயர்த்தியுள்ள தண்ணீர் சாக்கடை வரிகளை ரத்து செய்யவேண்டுமென்று பலர் பேசினர்கள். பொதுக்கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தனர்.

அம்பேத்கார் சட்டமெம்பரா?

தாழ்ந்த வகுப்புத்தலைவரான டாக்டர் அம்பேத்காரை, தம்மை வந்துபார்க்கும்படி வைஸ்ராய் அழைத்திருக்கிருராம். அவருக்கு இந்தியா கவர்மெண்டில் சட்ட மெம்பர் உத்யோகம் கொடுக்கப்போவதாக வதந்தி உலாவி வருகிறதாம்!

தமிழர்களுக்குத் தனி மதம் உண்டா?

சென்னையில் நடந்த "தமிழர் மத மஹாநாட்டின் தீர்மானங்களைச் சென்ற ஸஞ்சிகையில் வெளியிட்டுள்ளார்கள் இத்தகைய மஹாநாடு கூடியது இதுதான் முதல்தடவையென்று நினைக்கிறோம், இந்த மஹாநாட்டைப் பற்றி எங்கும் விளம்பரம் செய்யப்பட்டிருந்த போதிலும் தென்னிந்தியாவில் இதற்கு விசேஷ ஆதரவு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பிராமணத்வேஷத்திலும் தேவ பாஷாத்வேஷத்திலும் பிரஸித்தியடைந்துள்ள ஒரு சிலர் தங்கள் த்வேஷத்தைக் காட்டிக்கொள்ள இதையும் ஒரு ஸாதனமாகக் கொண்டது தான் மிச்சம். "தமிழர் மதம்" என்று தனியாக ஒரு மதமிருப்பதாக இதுவரையில் எவரும் கேள்விபட்டதில்லை. அத்தகைய மதமிருப்பது வாஸ்தவமானல் அதற்கு மூல பிரமாணமெது? தமிழர்களின் இஹ-பர ஸாதகமான மததர்ம ஸமூஹ நியமங்கள் எந்தத் தமிழ் புஸ்தகத்தில் தனியாக தொகுத்து கூறப்பட்டுள்ளதோ? தெரியவில்லை.

அந்தக் கூட்டத்தில் பேசிய புலிகளெல்லாம் தன் மனம் போனபடியெல்லாம் விமர்சன பாண்டித்யத்தைக் காட்டினார்களேயல்லது அதில் ஒன்று கூட நிலைத்திருக்கக் கூடியதல்ல. எல்லாம் வெறும் நிராதார கற்பனையே. இவர்கள் எந்தெந்த தமிழ் கிரந்தங்களை நம்புகிறார்களோ, அவைகளே இந்தப் பொய் கற்பனைகளுக்கு முற்றிலும் விருத்தமானவை யென்பதை ஸுலபமாக [illegible]

ஆர்ய வாஸனையே எதிலும் இருக்கக் கூடாதென்ற ஆத்திரம் தான் அந்த மஹாநாட்டில் தலைக்காட்டியது. இதில் வருத்தபடுகிறவர் எவருமிருக்கமாட்டார். ஆர்ய வேதமே வேண்டாமாம்! தேவாரம் திருவாசகம், திருவாய்மொழி, போன்ற தமிழ் கிரந்தங்களையே தமிழர்கள் ஆதரிக்கவேணுமாம். பாவம்!! மேற்படி தமிழ் கிரந்தங்களில் கூட சிலவற்றைச் செய்தவர்கள் ஆர்யர்களாச்சுதே? அதற்கு என்ன செய்வது? மேலும் மேற்படி தமிழ் கிரந்தங்களிலேயே, ஆர்ய ஜாதி மேன்மையும், ஆர்ய வேதமஹிமையும், ஆர்யக்கடவுளின், உயர்வும் தான் அதிகமாயிருக்கிறது. இதை இவர்கள் எப்படி ஸஹிக்க முடியும்?

கம்பராமாயணம் தள்ளுபடியா? அதையொப்புக் கொண்டால் எல்லாம் ஆர்யமயமாகத்தானே இருக்கும்? கடவுளை ஆர்யபாஷையால் வியவஹரிக்கக் கூடாதென்றும், திருமால் என்றே பேசவேணுமென்கிறார்களே? மேற்படி திருவாய் மொழி திருவாசகம் போன்றவைகளில் கணக்கற்ற ஆர்யச் சொற்களால் பகவானை ஸ்துதி செய்திருக்கிறார்களே? அதற்கு என்ன செய்வது?

வீட்டில் சுபாசுபச்சடங்குகளில் ஆர்ய பாஷை மந்திரங்களைச் சொல்லக்கூடாதென்றும் இந்த தமிழர்கள் கட்டுபாடு செய்வதில் ஒருவருக்கும் நஷ்டமில்லை. ஆனால் தமிழ் மந்திரங்களை இந்தத்தமிழ் ரிஷிகள் புதிதாக ஸிருஷ்டிப்பார்கள் போலும்? சடங்குகளில் ஆர்யபுரோகிதர்களை நீக்குவதுபற்றி ஆர்யஜாதியினர் தமிழருக்குநன்றி செலுத்தக்கடமைப்பட்டவர்களே. ஆர்ய ஸமூஹத்தில், புரோஹிதத்தொழிலுள்ளவர்கள் வெகு சிலரே. ஆயினும் அத்தொழில் காரணமாக ஆர்ய ஸமூஹத்தில் அவர்களது நிலைமை கேவலமாகவே இருக்கிறது. ஆகையால் புரோஹித பஹிஷ்காரம் ஆர்ய ஜாதி முன்னேற்றத்திற்கு வெகுவாக உதவி செய்யக்கூடும்.

நம் தேசத்தில் ஆர்யமத ஸம்பந்தமில்லாமல் எவ்வளவோ மதங்கள் இருக்கின்றன. அதுபோல் தமிழர்மதம் ஒன்றும் தனியாக இருப்பதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. எப்படியும் தமிழர்கள் சு-ம-கக்ஷியாரைப் போல் நாஸ்திகராயிராமல், தமிழ்கடவுள், தமிழ் ஸ்வர்கம், தமிழ் வேதம், தமிழ் மந்திரம் போன்று எல்லாம் தமிழ்மயமான தனி ஆஸ்திகமதத்தினராக விளங்குவது சந்தோஷகரமேயாகும். ஆனால் இந்தப்புதிய தமிழ் மதத்தைத் தென்னிந்தியத் தமிழ்ஜாதி ஆஸ்திகர்கள் எவ்வளவுபேர் ஆதரிக்கிறார்கள் என்பது தெரியவேணும். ஒ. நி.

புனர்வஸு பட்டாபிஷேக ராமாயண காலக்ஷேபம்.

சென்னை

சென்ற புதன்கிழமை 23–10–40 முதல் சென்னை திருவட்டீசுரன் பேட்டை நாகய்யர் தெருவில் ஸ்ரீ ஜகத்குரு மடத்தில் பிரம்மஸ்ரீ நாகைய நல்லூர் ராமநாத சாஸ்திரிகள் அவர்களால் புனர்வஸு பட்டாபிஷேக கிரமத்தை அநுஸரித்து ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபம் பிரதிதினம் இரவு 8-மணி முதல் நடந்து வருகிறது. பிரதிகாலையிலும் மடத்திலுள்ள பெரிய பட்டாபிராம படத்திற்கு விசேஷ பூஜையுடன் மூலபாரயணமும் நடைபெறுகிறது. காலக்ஷேபத்தின் சங்கல்பம் லோக க்ஷேமமும் தற்போதைய யுத்த கலவரத்தின் முடிவும் சித்திக்கவேண்டுமென்பதே.

சென்ற வெள்ளிக்கிழமை ஸ்ரீராமஜனனமும், நேற்று ஞாயிற்றுக்கிழமை ஸீதா கல்யாணமும் வைபவமாய் நடந்தேறின. பல கனதனவான்கள், ஸ்திரிகள், புருஷர்கள் எல்லோரும் சிரத்தையுடன் சிரவணம் செய்து வருகின்றனர். பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளவர்கள் ஸ்ரீமத் ராமாயணத்தில் வால்மீகி ராமயணத்துடன் கூட அத்யாத்ம ராமாயணம், ஆனந்த அத்புத, போதாயன ராமாயணங்கள், கம்பர், அருணாசலக்கவி சம்பு, மஹாநாடகம் முதலிய கிரந்தங்கள் எல்லாவற்றிலும் தகுந்த பரிசயத்துடன் மனோக [illegible] எல்லோருடைய [illegible]பினர்களாலும் நன்கு போற்றப்பட்டு வருகிறது.

நேற்று சீதாகல்யாண வைபவத்திற்கு ஹிந்து பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாஸய்யங்கார் உள்பட பல பிரமுகர்கள் சந்தோஷத்துடன் உதவிசெய்து சாஸ்திரிகளுக்கு சன்மானங்கள் பல அளிக்கப்பட்டன. ஸ்ரீ சாஸ்திரிகள் இதுவரை 100 ராம பட்டாபிஷேகங்கள் முடித்துவைத்திருப்பதைக் கொண்டு பாரசர்ய உபபுராண வசனத்தின் ஆதாரத்தின் மீது அவர்களுக்கு ஸ்ரீ ஜகத்குருவின் அநுக்ரஹத்துடன் 'ஸ்ரீமத் ராமாயண ஸாம்ராஜ்ய யஜ்வா' என்ற கௌரவ நாமாவை அனுப்பிக்க வேண்டுமாய் பலபிரமுகர்கள் அபிப்ராயப்படுகின்றனர். (ந-நி)

ஸ்ரீ பாஸ்கரேச்வரர் ஆலயத்திருப்பணி.

ஸ்ரீ ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாள் கிருபயை முன்னிட்டு கும்பகோணம் தாலூகாவில் ஸ்ரீ காவேரி மகாநதியின் வடகரையில் உத்தரவாகினி க்ஷேத்திரமாயும் பாடல் பெற்ற ஸ்வாயம்பூ க்ஷேத்திரமாயுமுள்ள திருகோடிகாவல் கிராமத்திற்கு கிழக்கே ½ மைல் தூரத்தில் பாஸ்கரபுர மென்ற ஒரு அக்கிரகாரம் இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே ஷை பாஸ்கரபுரம் கிராமம் ஆதிகாலத்தில் தஞ்சை மகாராஜா அவர்களால் ஸ்ரீ பாஸ்கரராயரவர்களுக்கு ஸர்வமானியம் செய்யப்பட்டது. ஷையார் மகாராயராயார்கள் மண்டல வித்வான், அவர்களால் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாஷ்யம் செய்யப்பட்டது. அவர்களினால் இன்னும் அநேக சாஸ்திர கிரந்தங்களும் மந்திர சாஸ்திரங்களும் வியாக்யானங்களும் செய்யப்பட்டது. மஹானென்பது எல்லா சாஸ்திரப்ரவீணர்களும் அறிந்த விஷயம். ஷை மகானவ ஷை பாஸ்கரபுரம் கிராமத்தில் தன் ஆத்ம பூஜையையாய் செய்து வந்த பாணலிங்கத்தை காவேரிநதி ஓரமாக ஒரு ஆலயம் கட்டிவைத்து அதற்கு தினம் பூஜை நிவேதனம் உத்ஸவங்களும் நாளது வரை குறைவன்றி நடந்து வருகிறது.

ரொம்பவும் புனிதமான ஷை ஆலயம் இப்போது கொஞ்சம் ஜீரணத்தை அடையும் என்கிற எண்ணத்துடன் ஷை கிராமவாசிகள் யோஜித்து ஜீரணோத்தரணம் செய்ய ஆரம்பித்து இப்போது சுமார் ஆயிரம் ரூபாய் (1000) வரையில் திருப்பணி நடத்திவிட்டார்கள். இன்னும் பூராவாக திருப்பணி முடித்து கும்பாபிஷேகம் செய்ய ரூ5000 ஐந்தாயிரம் ரூபாய் வரையில் ஆகும்.

ஆகையால் ஆஸ்திக கனதனவான்கள் ஷை கைங்கர்யம் பூர்த்தியடையும்படிக்கு வேண்டிய பொருளுதவி அவரவர்களால் முடிந்தளவுகொடுத்து ஸ்ரீ ஆனந்த வல்லீ ஸமேத ஸ்ரீ பாஸ்கரேச்வரர் ஸம்பூர்ண அனுக்ரஹத்தை அடையும்படியாக ஷை கிரமவாசிகளும் ஷை ஆலயம் டிரஸ்டி அவர்களும் கேட்டுகொள்ளுகிறோம்.

இலந்துறை

ஸ்கந்த மண்டல பூஜை

நம் நாட்டில் தற்காலம் கலி விலாஸத்தினால் ஏற்பட்டுள்ள துர்ப்புத்தியும், துராசாரமும், துர்ப்பிக்ஷமும் அகன்று ஸத்புத்தியும் ஸதாசாரமும், ஸுபிக்ஷமும் ஏற்பட்டு ஸமஸ்த ஜனங்களும் க்ஷேமமடையவேண்டி உள்ளூர் பிரம்மஸ்ரீ கங்கா ஜடேச சர்மா அவர்களது நன் முயற்சியால் சென்ற பல வருஷங்களாக நடந்து வருகிற வழக்கம் போல இவ்வாண்டிலும் நாளது ஐப்பசிமீ 14உ ஸ்ரீ ஸுப்ரமண்ய மூர்த்தியை இவ்வூர்ப் பெரியகோவில் வஸந்த மண்டபத்திலெழுந்தருளச் செய்து, சுக்லபக்ஷ ப்ரதமை தொடங்கி ஒவ்வொரு நாளும் விசேஷ நியமத்துடன் ஜப, பூஜா, பாராயணாதிகளுடன் உத்ஸவமும், மாலை 2 மணி முதல் 5 மணி வரையில் உள்ளூர் "ஸமரஸ குடீரம்" சிவாசார்ய கங்கா ஜடேச சர்மா அவர்களால் ஷை ஸந்நிதியில் ஸ்ரீ ஸ்காந்த புராண ப்ரவசனமும் நடைபெற்று வந்து 20உ மங்களவாரத்தன்று ஸ்ரீஸ்கந்த ஷஷ்டிபுண்ய காலத்தில் மிகச் சிறப்பாக விபூதி அபிஷேகமும் விசேஷ திவ்யாலங்காரத்துடன் பூஜைகள் நடந்து ஸ்கந்த மண்டல பூஜையின் பூர்வ பாகமாகிய ஸ்ரீ ஸ்கந்த ஷஷ்டி உத்ஸவமானது, பக்தகோடிகள் கண்டு களிக்க மிக நன்கு நடைபெற்றது மிகவும் போற்றத்தக்கதே. (ஓ-நி)

பஞ்சாயதன பூஜை

கும்பகோணம் அத்வைதசபையில் சேங்காலிபுரம் ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் பிரஸங்கம்

பூஜை ஞானத்திற்கு சாதனம். பூஜை செய்ய வேண்டிய கிரமத்தை சிரவணம் செய்தாலும் பூஜை செய்த பலனுண்டாகும்.

"य उ चैनमेवं वेद"

என்று சாஸ்திரம் சொல்கிறது.

"तेनेशस्य विधीयतामपचितिः"

என்றுபகவத்பாதாளும் சொல்லியிருக்கிறார்கள்

"संध्यास्नानं जपोहोमः देवानां च पूजनम् । आतिथ्यं वैश्वदेवं च षट कर्माणि दिनेदिने"

என்றுஇந்த 6 கர்மாக்களையும் நித்யகர்த்தவ்யமாகச்சொல்லியிருக்கிறது. முதலில் ஸ்னானம்செய்ய வேண்டும். பிறகு சந்தியாவந்தனத்தைஅனுஷ்டிக்க வேண்டும். அத்வைத ப்ரதிஷ்டாபனம் செய்த ஆசார்யாளும் அங்கங்கே கர்மானுஷ்டானத்தை வற்புறுத்திச் சொல்கிறார்கள் ஜபம்என்றால் பிரமயக்ஞம் எல்லோரும் வேதாத்யயனம் செய்யவேண்டும். ஈஸ்வரனே வேதரூபி. அத்யயனமில்லாமல் வேதாந்த சிரவணத்தால் மட்டும் உபயோகமில்லை. புருஷஸூக்தம் ருத்ராத்யாயம் இவைகளையாவது கடைசி பக்ஷம் ஒவ்வொருவரும் அத்யயனம் செய்யவேண்டும். புருஷஸூக்த மந்திரங்களுக்கு முக்யமாக பூஜையில்தான் விநியோகம். பிறகு பஞ்சாயதன பூஜை செய்யவேண்டும். போதாயனர் விஷ்ணு பஞ்சாயதனம் சிவபஞ்சாயதனம் இரண்டையும சொல்கிறார். விஷ்ணுவுக்கு முக்யத்வம் கொடுத்து மத்தியில் வைத்து பூஜை செய்தால் விஷ்ணு பஞ்சாயதனம். அதே போல் சிவனை வைத்து பூஜை செய்தால் சிவபஞ்சாயதனம்

"आदित्यमाम्बिकां विष्णुं गणनाथं महेश्वरम्"

எல்லா கர்மாக்களிலும் முதலில் பிராணாயாமம் செய்ய வேண்டும்.

"प्राणायामेनपुरूषं ध्यायमाना"

என்று வால்மீகி சொல்கிறார். ப்ராணாயாமத்தால் பகவானை தியானஞ் செய்ய வேண்டும். பிறகு சங்கல்பம் செய்கொண்டு ஆத்மபூஜை செய்ய வேண்டும். தீர்த்தத்தை பகவத் ஸ்வரூபமாக நினைத்து கலச பூஜையும் சங்க பூஜையும் செய்ய வேண்டும். பிறகு இரண்டையும் மிச்ரணம் செய்து அந்த தீர்த்தத்தால் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

ப்ரோக்ஷணத்தால் அதிர்ஷ்டமான ஸம்ஸ்காரம் எற்படுகிறது. ஹிருதயத்தில் விளங்கும் பரமேஸ்வரனை பாணலிங்காதிகளில் ஆவாஹித்து பூஜிக்கவேண்டும்.

निधनपतयेनमः

முதலிய மந்திரங்களால் ஆத்ம பூஜையை செய்ய வேண்டும். விசேஷமான ஐச்வர்யங்களுக்கு அதிபதி என்று அர்த்தம்.

लीनमर्थं गमयातीतिलिङ्गं

மறைந்த அர்த்தத்தை அத்வைதத்தை போதிக்கிறார். மந்திரங்களுக்கு விசேஷ மஹிமையுண்டு. மந்திரங்களுக்கு ஈஸ்வர சாந்நித்யம் எற்படுகிறது. பூஜைக்கு புருஷஸூக்தத்திற்கு மேற்பட்ட மந்திரம் கிடையாது. புருஷபதப்ரதி பாத்யமான நாராயணனும் சிவனும் ஒன்று தான்.

"एको देवःसर्वभूतेषु गूढः"

ஆக்னேயதிக்கிலிருந்து ஆரம்பித்து ஆதித்யாதி தேவர்களை வைக்கவேண்டும்.

இந்த கும்பகோண க்ஷேத்ரமே பஞ்சாயதனக்ரமமான ஸந்நிவேசத்தை யடைந்திருக்கிறது. முதலில் गणानांत्वा என்ற மந்திரத்தால் கணபதியை பூஜிக்க வேண்டும். பிறகு ஆதித்ய பூஜை. சூர்யன் ஸர்வ தேவதா ஸ்வரூபி. ஈஸ்வரன் ஆதித்ய மண்டலத்தில்தான் வசிக்கிறார். பிறகு இஸ்வரனை பூஜிக்கவேண்டும். இவன்தான் காலகாலன். தத்வஞானத்தால் தானாகவே மிருத்யு விலகுகிறார் என்று அர்த்தம். சிவனும் சக்தியும் சந்திரன் சந்திரிகை போல் கூட்டுப் பிரியாதவர்கள்.

அம்பாள் தான் ஸம்ஸார சாகரத்திலிருந்து தாரணம் செய்விக்கும் பிரஹ்மவித்யா ஸ்வரூபிணீ. பிறகு சாலக்ராமத்தில் விஷ்ணுவை பூஜிக்கவேண்டும். மந்திரங்கள் சொல்லும்பொழுது மந்திரார்த்தத்தையும் சிந்திக்க வேண்டும்.

यांते रुद्र शिवा—भिचाकशीहि

உனக்கு 2 ரூபம் இருக்கிறது. இதில் ஸர்வ மங்கள ரூபமாயும் அகோரமாயும் தர்மாதர்ம சம்பந்தமில்லாததான ரூபத்தால் எனக்கு ஞானத்தை யுண்டுபண்ணு. சிதானந்த ரூபிணியான பரதேவதையின் அனுக்ரஹத்தால் தான் உன் ரூபம் புலப்படும் எல்லா வியாதிகளையும் நிவர்த்திக்கிற பெரிய வைத்யன்நீ. ருத்ராத்யாத்தால் உன்னை நான் சரணாகதி செய்தவன். ஸர்வ தேவதைகளுக்கும் மேற்பட்டவன்நீ. நான் எவ்வளவு பாபியாயிருந்தாலும் என்னை கை தூக்கிவிட வேண்டும் शिवाय என்ற பதம் ஈஸ்வரன். நம: என்ற பதம் ஜீவனைக் குறிக்கிறது. இரண்டினுடைய ஐக்யத்தையும் தெரிந்து கொள்ள வேண்டும். மிருதங்க த்வனி தத்வமஸி வாக்யத்தை அனுகரணம் செய்கிறது. ஈஸ்வரன் அபிஷேக ப்ரியன். க்ஷீராபிஷேகத்தால் ஞான சித்தி எற்படுகிறது. அப்பய தீக்ஷிதேந்த்ராள்

"मौलौ गङ्गाशशाङ्कौ"

என்ற சுலோகத்தால், உன் சிரஸில் கங்கை, சந்திரன், கையில் ஸர்ப்பங்கள், இடதுபக்கத்தில் பனி மலையின் புத்திரி, தயையால் நனைந்தவள். சரீரத்தில் நனைந்தவள். தாபத்ரயதப்தமான என் ஹிருதயத்தில் வசிப்பதால்தான் இந்தக் குளிரைத் தாங்கமுடிகிறது. என்று பரம பக்தியுடன் உருகிச் சொல்கிறார்கள். சிவசாயுஜ்யம் ரொம்பவும் விசேஷமானது. கற்பூரம் எப்படி ஜ்யோதிர்மயமாகிறதோ அப்படியே சிவசாயுஜ்யத்தை அடைகிறான். பிரம்ம சாக்ஷாத் காரபர்யந்தமான சகலசிரேயஸ்ஸுக்கும் பூஜை தான் அடிப்படையான தர்மம். அபிஷேகத்திற்குப்பிறகு அர்ச்சனை. ருத்ரத்ரிசதியால் அர்ச்சிப்பது ரொம்பவும் விசேஷம். அர்ச்சனை செய்யும்பொழுது அதன் அர்த்தத்தை அனுஸந்தானம் செய்யவேண்டும். பிறகு தூபதீபாதிகள். இவைகளால் அஞ்ஞானம் நிவர்த்தியாகிறது. பிறகு நைவேத்யம்.

இஸ்வரனே பிம்ப பூதனாயிருக்கிறபடியால் அவனைத்தான் பூஜிக்கவேண்டும். பிரதிபிம்பம் அழகாயிருக்க வேண்டுமானால் பிம்பத்தைத்தான் அழகு படுத்தவேண்டும். பாகவதத்திலும்

"नैवात्मनःप्रभुरयं विदाधीत कामान् +प्रति मुखस्य यथा श्रीः"

என்று சொல்லப்பட்டிருக்கிறது பிம்பமும் பிரதிபிம்பமும் ஒன்றுதான் ஸீதாராமர்கள் கூட சேதுவில் பரமேஸ்வரனை பூஜித்திருக்கிறார்கள்

ताम्यां बाणोऽर्चितो देवः கிருஷ்ணார்ஜுனர்கள் கூட பாணலிங்கத்தில் பூஜித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

மஹாவிஷ்ணுவும் தன் நேத்ரத்தால் ஈஸ்வரனை அர்சித்திருக்கிறார்

ते वारं वारं स्तेत्रं करोमि

என்ற அர்த்தத்தில்தான் தேவாரம் என்ற தமிழ் வார்த்தை வந்திருக்கிறது. விசேஷமான வஸ்துக்கள் கிடைக்காவிட்டாலும் பத்ரம் புஷ்பம் என்றபடி எந்த வஸ்துக்கள் கிடைக்கிறதோ அவைகளைக்கொண்டு பூஜிக்கலாம். புஷ்பாதிகளை தானாகவே எடுப்பது தான் விசேஷம். ஸ்திரீகளும் பூஜிக்கலாம். ஆனால் பர்த்ருசுருச்ஷைக்கு விரோதம் எற்படக்கூடாது.

'गृहं श्मशानं तत्र बिम्बवर्जितं' கிருஹத்தில் அவசியம் பூஜாகிருஹம் இருக்க வேண்டும் இது இல்லாவிட்டால் ஸ்மசானம்தான். வைதீக பூஜைதான் செய்ய வேண்டும். தாந்திரிகபூஜை செய்யக்கூடாது. பூஜைக்கு முன்பு ஸ்னான சந்த்யாதிகளை அவசியம் அனுஷ்டிக்க வேண்டும். எல்லாரும் அவ்விதம் பஞ்சாயதன பூஜை செய்து சகல க்ஷேமத்தை யடையவேண்டும்.

விழுப்புரம் வேதபாடசாலை

4—11—40 வெள்ளிக்கிழமை தினம் ஷ்டிபாடசாலைக்கு தஞ்சை ஜில்லா, கணபதி அக்ரஹாரத்தில் வஸிப்பவர்களான ஒரு ஸன்யாஸிகளும், இவ்வூர் S. I. R. டிஸ்ட்ரிக்ட் இஞ்ஜீநீரும், பரம தார்மிகருமான ம-ா-ா-ஸ்ரீ சுந்தரம் அய்யர், வேதபாடசாலை கார்யதர்சி லோகோ ஆபீஸ், அகௌண்டெண்ட், ஸ்ரீராகவய்யங்கார் ஷ்டி ஆபீஸைச்சேர்ந்த ஸ்ரீமஹாதேவ அய்யர் முதலியவர்கள் விஜயம் செய்தார்கள். ஸ்ரீஸ்வாமிகள் வித்யார்த்திகளை வேதம் சொல்லச் சொல்லி கேட்டு ஸந்தோஷித்ததுடன் அவர்கள் சொன்ன வேதபாகத்திற்கு அர்த்தமும் உபதேசித்தார்கள்.

ஷ்டிபாடசாலை உபாத்யாயர் பிரார்த்தனைக்கிணங்க அன்றிரவு ஸ்ரீ. சுந்தரம் அய்யரவர்கள் கிருஹத்தில் ஸ்ரீஸ்வாமிகள் ஸ்ரீ ஆதிபாதாளுடைய உபதேசஸாரமான ஸோபானபஞ்சகம் என்னும் விஷயம் உபன்யஸித்தார்கள்.

நவம்பர் 8—9— இந்த நாட்களிலும் வேதபாடசாலை, கார்யதர்சி ஸ்ரீ ராகவ அய்யங்கார் அவர்கள் கிருஹத்தில், விருத்தாசலம் லோகோ ஆபீஸைச் சேர்ந்த ஸ்ரீசிவசுப்ரமண்ய அய்யரவர்கள்முறையே ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீராமஜனனம், விச்வாமித்ர ஆகமனம், ஸீதாகல்யாணம் மேற்கோளுடனும் விசேஷமாக ஸங்கீதத்துடனும், உபன்யஸித்தார். இம்மாதிரி நல்ல கார்யங்கள் நடைபெறும் விஷயத்தில், ஸ்ரீராகவஅய்யங்கார் ஸ்ரீமஹாதேவ அய்யர், இவர்களுடை சிரத்தை போற்றத்தக்கது. ந-நி

சேம்பர்லேன் மரணம்.

ஸமீபகாலம் வரையில் பிரிடிஷ் பிரதம மந்திரியாயிருந்து ராஜீநாமா செய்து விலகிய சேம்பர்லேன் இறந்துபோனார்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ ஐப்பசி-மீ 29௳

மாணாக்கர்களும் ராஜீயக் கிளர்ச்சியும்

ஸமீபத்தில் நேர்ந்த சில ராஜீய ஸம்பவங்கள் காரணமாக அநேக காலேஜ்களிலும் பள்ளிக்கூடங்களிலும் வாசிக்கும் மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தும் ஊர்வலம் நடத்தியும் தங்களது உணர்ச்சியைக் காட்டினார்கள். இக்கிளர்ச்சி காரணமாகச் சென்னை கவர்ன்மெண்டார் மாணவர்களுக்கு எச்சரிக்கை செய்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். காலேஜ்களில் படிக்கும் மாணவர்கள் இம்மாதிரி தங்களுக்கு ஸம்பந்த மில்லாத ராஜீயக்கிளர்ச்சிகளில் ஸம்பந்தப்பட்டு ஆர்ப்பாட்டம் நடத்துவதை கவர்ன்மெண்டார் கண்டிக்கிறார்கள். இத்தகைய கிளர்ச்சிகளில் தீவ்ரமாக ஈடுபடுகிற மாணாக்கர்களுக்கு ஸர்க்கார் உத்யோகம் கொடுக்கத் தடையேற்படுமென்றும், அவச்யமிருந்தால் அவர்களைக் காலேஜ்களிலிருந்தே விலக்கிவிடவும் நேருமென்றும் கூறியிருக்கிறார்கள். அத்தகைய மாணாக்கர்களுடைய ஜாப்தாவைத் தயாரித்து அனுப்பும்படி காலேஜ் தலைவர்களுக்கு உத்திரவு செய்யப்பட்டிருக்கிறதாயும் தெரிகிறது.

கவர்மெண்டாரின் இந்த உத்திரவானது ராஜீய வாதிகளுக்கும், மாணாக்கர், பெற்றோர் ஆகியவர்களுக்கும் மனக்கலக்கத்தையுண்டாக்கியிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு முன் பலதடவை மாணாக்கர்கள் இதுபோன்ற பெரிய ராஜீயக்கிளர்ச்சிகளில் ஸம்பந்தபட்டிருக்கிறார்களாயினும் இவ்வளவு பலமான சிக்ஷைவிதிக்க கவர்ன்மெண்டார் முன்வந்ததில்லையென்று ராஜீய வாதிகள் நினைக்கிறார்கள். சில பத்திரிகைகளும் இவ்வுத்தரவை ஆக்ஷேபிக்கின்றன.

ஆயினும் வித்யாப்யாஸத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் தங்கள் நிலைமைக்கு ஏற்காததான ராஜீயக்கிளர்ச்சிகளில் ஸம்பந்தப்படுவது எவ்வளவுதூரம் நியாயமாகுமென்பதைப் பொதுஜனங்களும் யோஜிக்க வேண்டியதே. இவ்விஷயத்தில் ராஜீயக் கக்ஷிகளுக்குள்ளேயே நிலையான அபிப்ராயம் இருப்பதாகத் தெரியவில்லை. ஸ்ரீமான் காந்தி, சாஸ்திரியார், ஸி. ஆர். போன்றவர்களே மாணவர்கள் ராஜீய விஷயங்களில் தீவ்ரமாக ஸம்பந்தப்படுவதைப் பலதடவை ஆக்ஷேபித்து அபிப்பிராயம் வெளியிட்டிருக்கிறார்கள். மாணவர்கள் படிக்கும் நிலைமையில் இருப்பவர்களே. அவர்களுடைய புத்தியானது பரிபக்வமடைந்ததன்று. போதிய உலக அனுபவமும் அவர்களுக்கு இந்த வயதில் ஏற்பட நியாயமில்லை. மேலும் படிக்கும் ஸமயத்தில் காலேஜ்களின் சட்டதிட்டங்களுக்கும், உபாத்யாயர்களின் ஆக்ஞைக்கும் கட்டுப்பட்டு நடக்கவேண்டியதே அவர்களது தர்மமாகும். அப்படியிருக்க உபாத்யாயர்களுக்கு அறிவிக்காமலும், அனுமதி பெறாமலும் மாணவர்கள் தங்கள் மனம் போனபடியெல்லாம் நடந்து கொள்வதென்று ஏற்பட்டால் வித்யா ஸ்தாபனங்களின் நிர்வாகம் சீர்கெட்டு விடுமென்று ஸர்க்கார் நினைப்பதில் நியாயம் இருக்கிறது. ஆகையால் இவ்விஷயமாக ஓர் வரம்பு ஏற்படவேண்டுமென்று பலர் விரும்புவது ஸஹஜமே.

எந்த ராஜீயக் கக்ஷியும் இக்காலத்தில் மாணவர்களைத் தங்களுக்குப்பின் பலமாகத் தூண்டி விடுவது ஓர் ஸாதாரண வழக்கமாகி வருகிறது. மாணவர்கள் தன் புத்தி பலத்தைக்கொண்டு ஒரு வித முடிவுக்கு வரக்கூடாமல், பிறர் போதனைக்கே ஆளாகும் நிலைமையிலிருப்பவர்களாகையால் எந்தக்கக்ஷியாரும் அவர்களைப் பிரசாரக்கருவியாக உபயோகிக்கத் தயங்குவதில்லை.

காங்கிரஸ் காரர்கள் எலெக்ஷன் ஸமயங்களில் சிறு பிள்ளைகளிடம் கொடியைக் கொடுத்து ஜே கோஷம் போட்டுக்கொண்டு சுற்ற விடுவதைப் பார்க்கிறோம். அந்தக்குழந்தைகள் தங்கள் ஜாதி, குலம், தெய்வம் பெரியோர் ஆகிய எதையும் லக்ஷ்யம் செய்யாமல் தூஷிக்கக்கற்றுக் கொடுக்கப்படுவதையும் அந்தப்படியே அவர்கள் கோஷம் செய்வதையும் பார்க்கிறோம். இது நியாயமல்லவென்று சொன்னால் மாணவர்களின் உணர்ச்சியை அடக்க முடியுமாவென்று காங்கிரஸ் தலைவர்கள் கக்ஷி பேசுகிறார்கள். உண்மையில் மாணவர்கள் தாங்களாகவே ஹிதாஹித நிர்ணயம் செய்து கொண்டு உணர்ச்சி பெற்று விட்டதாகச் சொல்ல முடியுமா?

ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியரும், கனம் சாஸ்திரியாரும் பிரகிருத உத்திரவைக் கண்டிக்கிறார்கள். இதில் நியாய மிருக்கலாம். ஆயினும் ஸி. ஆர். சொல்லும் கக்ஷிவாதம் நிலைக்கக்கூடியதாயில்லை. ராஜிய விஷயங்களில் மாணவர்கள் ஸம்பந்தப்படக் கூடாதென்பது ஸி. ஆர். அபிப்பிராயமானால் இதில் அவர் கக்ஷி பேச இடமேயில்லை. மாணவர்கள் காங்கிரஸுக்கு எதிரான ராஜியக்கக்ஷியில் சேர்ந்து குழப்பம் விளைவித்தால் அப்போது ஸி. ஆர் போன்ற தலைவர்கள் மாணவர்களைக் கண்டிக்கிறார்கள் பொது விஷயங்களில்மாணவர்கள் ஸம்பந்தப்படுவது உசிதமில்லை யென்று உபதேசம் செய்கிறார்கள். ஆந்திரதேசப் பிரிவினை விஷயமாக ஆந்திர மாணாக்கர்கள் ராஜாஜியைப் பாடு படுத்திய போது மேற்கண்டவாறு அவர் உபதேசித்தாரல்லவா? இப்போது மட்டும் வேறு நிலையில் பேச இட முண்டா? அண்ணாமலையூனிவர் ஸிடியில் நடந்த விபரீதக் கிளர்ச்சிகளின் பூர்ண அநுபவம் பெற்ற கனம் சாஸ்திரியாரும் இவ்விஷயத்தில் வியவஸ்தா மூலமாக ஒரு கொள்கையை அவலம்பித்திருப்பதாகத் தெரியவில்லை அண்ணாமலையூனிவர் ஸிடியில் நடந்த மாணவர் கிளர்ச்சியை நியாயமென்று நினைத்தவர்களும் சிலர் உண்டு. அதை எதிர்த்தவர்களுமுண்டு. ஆயினும் அங்கு பலவித சிக்ஷை முறைகள் கையாளப்பட்டன. அதுபோல் இத்தகைய விஷயத்தில் இரண்டுபட்ட அபிப்பிராயமிருப்பது ஸாத்யமாயினும் ஒவ்வொரும் தங்கள் தங்கள் கக்ஷி நலத்தை கருதி மட்டும் இதில் நியாயம் பேசுவதுதான் ஆக்ஷேபிக்கத்தக்கதாயிருக்கிறது. தங்களுக்கென்றால் ஒரு நியாயம் பிறருக்கு வேறு நியாயமென்று இதில் பேச இடமிருக்கக் கூடாது. மாணவர்கள் ராஜீய விஷயங்களில் அல்லது எந்தப் பொது விஷயங்களிலும் ஸ்வதந்திரமாகக் கலந்துகொள்ளும் விஷயத்தில் பொதுப்படையான வியவஸ்தா மூலம் எல்லாரையும் கட்டுப்படுத்தக் கூடிய ஒரு நியமம் ஏற்படவேண்டும். அப்போது இத்தகைய கடுமையான உத்திரவுகளுக்கு இடமில்லாமல் போய் விடும்.

பிரம்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் காலஞ் சென்றார்

ஆர்யதர்மம் மாஜி ஆசிரியர்.

சென்ற ஹூ ஐப்பசிமீ 19௳ திங்கட்கிழமை (4—11—40) இரவு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் மடம் ஆஸ்தான வித்வானும், நமது "ஆர்யதர்மம்" மாஜீ பத்திராதிபருமான "மஹோபதேசக கவிரத்ன" ப. பஞ்சாபகேச சாஸ்திரியார் தனது 67-ஆம் வயதில் காலஞ் சென்றாரெனக்கேட்க நாம் வருந்துகின்றோம். அன்னாருடைய பிரிவானது ஆஸ்திக உலகிற்கு நிகழ்ந்ததோர் துரதிருஷ்டமெனக் கூறுதல் மிகையாகாது. ஸ்ரீமான் சாஸ்திரியார் பவஹூ வைகாசிமீ 28௳ (9—6—1874) செவ்வாய்க்கிழமையன்று தனது பூர்வீகமான பைஞ்ஞாலுடென்றும் துளஜேந்திரபுரம் கிராமத்தில் ஜனனமானார். "மன்னார்குடி பெரிய சாஸ்திரிகள்" என் பிரக்யாதியுடன் விளங்கி வந்த மஹனீயர்களான ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதரின் முக்கிய சிஷ்யரான காலஞ் சென்ற "மஹாமஹோபாத்யாய வேதாந்தகேஸரி" "கச்சபி" கணபதி சாஸ்திரிகளுக்கு நமது சாஸ்திரியார் சகோதரரும் சிஷ்யரும் ஆவர். பால்யத்திற் சிலகாலம் உள்ளூரிலேயே உள்ள அய்யாஸாமி சாஸ்திரிகள் என்றும் பெரியோரிடம் வித்யாப்யாஸம் செய்து, அதன்பிறகு 1893 முதல் 1902 வரையில் கோனேரிராஜபுரத்திலும் 1903 முதல் 1910 வரையில் கும்பகோணத்திலும் தன் தமயனான "மஹாமஹோபாத்யாய வேதாந்த கேஸரி" அந்தேவாஸியாயிருந்து வியாக்யானம், வேதாந்த பாடங்கள் கேட்டு வந்தார்கள்.

இதனிடையே பல மாணவர்களுக்கு காவிய நாடக பாடமும் கற்பித்து வந்தனர் 1911ஹூ இவர் தமயனார் தனது 39ம் வயதில் காலஞ்சென்றதும், நமது கவிரத்னத்திற்கு ஸ்ரீ மஹாஸன்னிதானத்தின் திவ்யானுக்ரஹத்தால் சுமார் 20 வருஷகாலம் ஸ்ரீ மடம் வித்வானாகவும், ஆஸ்தான வித்வானாகவும் ஸ்ரீ பரமாசார்யாளுக்குக் கைங்கர்யம் செய்யும் பெரும் பாக்கியம் கிட்டியது. அச்சமயம் ஸ்ரீ பரமாசார்யாரவர்கள் லோக க்ஷேமார்த்தம் விஜயயாத்திரையிலிருந்தபடியால் நமது சாஸ்திரிகளவர்களுக்கும் மஹேந்திரமங்கலம், திரிசரபுரம், திருவானைக்காவல் முதலிய திவ்ய க்ஷேத்திர தரிசன விசேஷமும் கிடைத்தது. இவ்விதம் க்ஷேத்ராடனம செய்து 1916ஹூ முதன்முதலாக ஸ்ரீ பரமாசார்யாளின் திவ்யானுக்ரக பூர்வகமாக துவக்கப்பெற்ற "ஆர்யதர்மம்" என்னும் ஸநாதனப்பத்திரிகைக்கு பத்திராதிபராக ஸ்ரீமஹாஸன்னிதானத்தின் ஆக்ஞையின் பேரில் நியமிக்கப்பட்டார்கள். இப்பத்திரிகைக்கு 1916 முதல் 1921ஹூமுடிய பத்திராதிபராகவும் 1922முதல் 1928முடிய

உபபத்திராதிபராகவுமிருந்து தனதுஉழைப்பினும், ஊக்கத்தினும் மாதப்பதிப்பாயிருந்த அப்பத்திரிகையை வாரப்பதிப்பாகச் செய்து பிரபலப்படுத்தினர்.

அக்காலே, தேசிய ராஜியக் கிளர்ச்சியையும், முரண்பாடான லக்ஷியங்களையும் ஒரு சிறிதும் பொருட் செய்யாது ஸனாதன தர்மத்தையும் ஸத்தியத்தையுமே தமது பெரும் நோக்கமாகக் கொண்டு அதிதீவிரமாகவும், கம்பீரமாகவும் செய்த கர்ஜனைகள் லட்சியத்தை 'ஆர்யதர்மம்' முதல் பத்து புஸ்தகங்களிலிருந்து நன்கு அறியற்பாலது. இத்தகைய அன்னாரது உழைப்பையும் கல்வித்திறமையும் சிலாகித்து தக்ஷிண பாரத மஹாமண்டல சபையினால் 1921ம் ஆண்டில் அவருக்கு "மஹோபதேசகர்" என்ற பட்டமும் வழங்கப்பட்டது. "வயோநிர்ணய பாவப்ரகாசிகா" "ஆசார்ய அஷ்டோத்தர சதகம்" "நவரத்னமாலை" தாடங்கப்ரதிஷ்டா மஹோத்ஸவசம்பூ, வ்யாஸபூஜா மஹோத்ஸவசம்பூ முதலிய கிரந்தங்களையும், ஸ்ரீகாஞ்சீ மஹிமை, ஜம்புகேச்வர க்ஷேத்திர மாஹாத்மியம் முதலிய மொழி பெயர்ப்பு நூற்களையும் அவர்கள் இயற்றினர்கள். ஸ்ரீ பரமாசார்யாளும் நமது சாஸ்திரிகளின் பாண்டித்யத்தையும கவிதா வாக் விலாசத்தையும் சிலாகித்து அன்னருக்கு 23-9-23ல் "கவிரத்னம்" என்னும் பிருதையும் தக்க சம்மானங்களுடன் அனுக்ரஹித்தார்கள். இதன் பின்பு 1929 முதல் 1933 வரையில் ஜம்புகேச்வர வித்யாஸ்தானத்தில் ஆசிரியராகவிருந்து சரீரஸௌக்யம் காரணமாக ஸ்ரீ பரமாசார்யாளின் அனுமதியின் பேரில் முடிகொண்டான் கிராமத்தில் வாசஞ்செய்தார்கள்.

இச்சமயம் மாம்பலம் ஸ்ரீராமகிருஷ்ண உயர்தர வித்யாசாலை கௌரவசிர்வாஹரான ஸ்ரீமான்வாசுதேவாசார்யஸ்வாமிகள் பி. ஏ. எல். டி அவர்களின் கருத்துக்கிணங்க ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸருடைய சரித்திரத்தையும் பள்ளி மாணவர்களுக்கு உபயோகமாகும்படி தெள்ளிய இனியசம்ஸ்கிருத நடையில் இயற்றினர்கள் இவரிடம் வித்யாப்யாசம் செய்த சிஷ்யர்களில் பலர் இப்பொழுது வைதீகத்துறையிலும் லௌகீக மார்க்கத்திலும் பிரமுகர்களாக விளங்கி வருகின்றனர். சம்ஸ்கிருத வித்தியாபிவிருத்திக்கும் சனாதன தர்மத்திற்கும் சரித்திர கலைக்கும் நமது சாஸ்திரியார் தொண்டு மிகத்தலைசிறந்ததாகும். ஆகவே இவருடைய பிரிவானது ஆஸ்திக உலகிற்கும் பண்டித சமூஹத்திற்கும் நிகழ்ந்த ஒரு பெரும் துரதிருஷ்டமென்று துணிந்து கூறலாம். ஜேஷ்ட புத்திரன் ஸ்ரீமான் ப. வ.கணபதி சாஸ்திரிகளவர்களுக்கும, மற்றய குடும்பத்தினருக்கும நமது அநுதாபத்தைச் செலுத்துகின்றோம்.

(3-ம் காலம் தொடர்ச்சி)

மேலும் ராமாயணம் ஆதி காவ்யம். அதைக்கொண்டுதான் பின்னால் உண்டான மகாகவிகளெல்லாம் காவ்யம் எழுதக்கற்றுகொண்டார்கள் சம்ஸ்கிருதந்தான் உலகத்திலுள்ள பாஷைகளுக்கெல்லாம் மூலம் என்பதுபோல் ராமாயணம்தான் உலகத்திலுள்ள எல்லா காவியங்களுக்கும் மூலம். இதற்குச்சமமான காவ்யம் இதுவரை சமஸ்கிருதத்திலாவது அல்லது வேறுஎந்தபாஷையிலாவது எற்படவில்லையென்று சமஸ்கிருதத்துடன் மற்றபாஷைகளையும் கற்றறிந்த கலாவிற் பன்னர்கள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட முதன்மையான காவியத்தின் அர்த்தங்களை சரியானபடி அறிந்து கொள்வதற்கு காவ்ய லட்சணங்களையும் காவிய தோஷங்களையும் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமாகும்.

ஸ்ரீமத் ராமாயணத்தை எப்படி அறிய வேண்டும்?

(சேங்காலிபுரம் வி. பஞ்சாபகேசய்யர்.)

ஆகஸ்டு 8உ ஆர்யதர்மத்தில் வாலிவதத்தால் தர்ம சூட்சுமத்தைத்தான் ஸ்ரீராமன் வெளிப்படுத்தினரென்றும் செப்டம்பர் 5-உயில் ராமாயணம் தர்ம சாஸ்திரமென்றும் நிரூபித்திருந்தேன். அவைகளுக்கு முன்னும் பின்னும் ராமாயணத்தை பற்றி பல வியாசங்கள் ஆர்யதர்மத்தில் பிரசுரமாயிருக்கின்றன. அவைகளுள் ஒன்றில் ஒரு பக்தர் "ராமாயணத்தை எவ்விதமாய் அறியவேண்டுமோ அம்மாதிரி அறிவதற்கு வேண்டிய பிரயத்தனம் நமது வித்வான்களிடை குறைந்து வருவதை கவனிக்க மிக்க வருத்தமாயிருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தார். அதே பக்தர் பின்னொரு வியாசத்தில், ரதத்திலேறி காட்டுக்குப் போகையில் சுமந்திரரிடம் ராமரால் சொல்லப்பட்ட "[illegible]" என்றவாக்கியத்தில் [illegible] என்றகிரியா பதத்திற்கு என்காதில் விழவில்லை" என்ற அர்த்தத்தைமாற்றி "ராமன் திருத்த சம்மதிக்கவில்லை" என்பதுதான் அர்த்தம்என்றுசித்தாந்தம்செய்திருக்கிறார். இதுதான் என்னை இந்த வியாசம் எழுதத்தூண்டிற்று. பக்தி பரவசத்தால் ஒருவிதமாய் சித்தாந்தம் செய்து கொண்டவர்களுக்கு என் வித்தியாசங்கள் உபயோகமில்லாவிட்டாலும் பட்சபாதமில்லாமல், ராமாயணத்தை அறிந்துகொள்ள விரும்புவோர்களுக்கு அனுகூலமாயிருக்குமென்றே எழுதுகிறேன்.

ஒரு மதம் அல்லது மார்கத்திற்கென்றில்லாமல் உலகத்தில் பகுத்தறிவுள்ள சகல ஜீவராசிகளையுத்தேசித்தும் ராமாயணம் பிரவர்த்திக்கிறது. பிறவித்துன்பங்களாகிற வியாதிகளுக்கு தர்மங்கள் என்ற மருந்துகளை காவ்யநடை என்ற தேனில் கலந்து வால்மீகி பகவான் அருளியிருக்கிறார். இதையே பிராசீன காவ்யலட்சணக்ஞர் பின் கண்டபடி சொல்கிறார்.

[illegible]

இப்போது ராமாயணத்தை எப்படி அறியவேண்டும் என்பதைப்பற்றி விசாரிப்போம்.

முதலாவதாக

அது ஒரு ரஸமுள்ள காவ்யமென்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். இதையே [illegible] என்று ராமாயணமே கூறுகிறது. எதாவது ஓரிடத்தில் மட்டும் காவ்யமென்பதைக்குறிப்பிட்டால் அதை வியாக்யாதாக்கள் வேறுவிதமாய் அர்த்தம் செய்து விடுவார்களோவென்றுசந்தேஹித்துதானோஎன்னவோ வால்மீகி பகவான், ராமாயணாரம்பத்தில் 7 தடவைகளும், முடிவில்யுத்தகாண்டம் கடைசீ சர்கத்தில் 4 தடவைகளும் [illegible] என்று அடுத்தடுத்துக் கூறுகிறாரோவென்று நினைக்கவேண்டியிருக்கிறது. அல்லது ராமாயணத்தைப் படிப்பவர்களைக் குறித்து பதங்களை சிரமப்பட்டு இழுத்து அர்த்தம் செய்து கொண்டு கஷ்டபடாதீர்கள் என்று நினைப்பூட்டுவதற்காகவே இப்படிப் பலதடவை "இது காவ்யம்" "இது காவ்ய" மென்று எச்சரிக்கிறாரோவென்றும் ஊஹிக்கலாம். சரியான காரணமிருந்தாலொழிய வால்மீகி ஒருதரம் சொன்னதை மறுபடி சொல்வது வழக்கமில்லை.

காவ்யமென்றால் எப்படியிருக்க வேண்டுமென்று கவனிப்போம். [illegible] ரென்ற பிராசீன காவ்ய லட்சணகர்த்தாவின் கீழ்க்கண்ட மஹாகாவ்ய லட்சணங்கள் கவனிக்கத்தக்கவை.

[illegible]

இதன்படி நல்ல காவ்யங்களுக்கு அதிக வியாக்கியானம் தேவையில்லை.

[illegible]

1 [illegible], 2 [illegible], 3 [illegible], 4 [illegible], 5 [illegible], 6 [illegible], இம்மாதிரிபொருள் செய்யக்கூடிய பதங்களை கவிகள் உபயோகிக்கமாட்டார்கள் என்பதுஇதன் பொருள் [illegible] என்பதற்கு விவரணம்.

[illegible]

(பொருள்) எதன்சரியான அர்த்தமான [illegible] புத்திமான்களால் பலாத்கார[illegible] இழுத்துச் செய்ய வேண்டியிருக்கிறதோ அது [illegible] [illegible]. ஒருவரின் விருப்பத்திற்கிணங்க செய்யப்படும் அந்த அர்த்தம்சப்த சாஸ்திரங்களின் எல்லையைத் தாண்டியது.

இன்னும் மேலேபாக்கி 5 தோஷங்களுக்கும் லட்சணங்கள் சொல்லியிருக்கிறார். விரிவாவது பற்றி இத்துடன் நிறுத்துகிறேன்.

இது சந்தர்ப்பத்தில் பாலகாண்டத்தில் இரண்டாவது சர்க்கம்கடைசிசுலோகத்தில் [illegible] என்று கூறியிருப்பதுகவனிக்கத்தக்கது. இந்தச் சுலோகத்தின் கடைசிபாகத்துக்கு நிஷ்பட்சபாதமான திலக வியாக்கியானத்தில் "[illegible]" என்று அர்த்தம் எழுதப்பட்டிருக்கிறது. கோவிந்தராஜரும் [illegible] என்று [illegible] என்பதற்கு [illegible] இல்லாததென்றே ஒப்புக் கொண்டிருக்கிறார்

ஆகையால் ராமாயணத்துக்கு அர்த்தம் செய்வதில் மேல்கண்ட [illegible] முதலிய 6 தோஷங்களுமிருக்கக்கூடாது. [illegible] [illegible]த்துக்கு விரோதமில்லாமல் தோன்றும் அர்த்தமே [illegible]. அது [illegible] அல்லது [illegible]த்தை மாற்றி கொண்டு பிரவிருத்திக்கிறது.

(தொடர்ச்சி முதல் காலம் பார்க்க.)

வாலிவதம்

ஒரு ஆக்ஷேபம்

(குலபதி பி. ஏ. ஸுப்ரமண்ய அய்யர்.)

வாலியை ஸ்ரீ ராமர் மறைந்தே தான் கொன்ருர் என்பதாக பாரதம் முதலிய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருப்பதால் அதற்கு இணங்கவேதான் நாம் வால்மீகி வசனங்களுக்கு அர்த்தம்கொள்ளல்வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். அவ் விதம் அர்த்தம் கொள்ளவேண்டியது அனுவச்யம் என்பது கோவிந்தராஜாள் பாலகாண்டம் 48ம் ஸர்க்கம் 31ம் சுலோகத்துக்கும், தீர்த்தர் 49ம் ஸர்க்கம் 16ம்ச்லோகத்துக்கும் எழுதியுள்ள வ்யாக்யானங்களால் தெளிவாகும்.

வாலிவத ஸம்பந்தமான ரிக்வேத மந்த்ரங்கள்.

நாரதர் வால்மீகிக்கு ஸங்க்ஷேப ராமாயணத்தை ரிக்வேத மந்த்ரங்களால் உபதேசித்ததாக ஆனந்த ராமாயணம் ராஜ்ய காண்டம் 14ம் ஸர்க்கத்தில் காணப்படுகிறது. காலஞ்சென்ற ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார் எழுதியுள்ள வால்மீகி ராமாயண தத்வார்த்த தீபிகையில் பாலகாண்டம் முதலிய எல்லா காண்டங்களுக்கும் தனித்தனியே என்ன ரிக்வேத மந்த்ரங்கள் சம்பந்தமானவை என்று வெளியிடப்பட்டிருக்கிறது. அவைகளுள் சுக்ரீவன் வாலி சம்பந்தமான மந்த்ரங்களுள் முக்யமானது இது: யஜுர் வேதத்திலும் உள்ளது:

யஸ்தி த்யாஜ ஸ சிவிதம்
ஸகாயாம் நதஸ்ய வாச்யபி
பாகோ அஸ்தி/ யதீம் ச்ருணோத்யலகம்
ச்ருணோதி
நஹி ப்ரவேத ஸுக்ருதஸ்ய பந்தாம்

(8ம் அஷ்டகம் 2ம் அத்யாயம் 23ம் வர்க்கம்) இதனுடைய அர்த்தம் பின்வருமாறு:—

ஸகாவினுடைய (சிநேகிதனுடைய) கடமையைத்தெரிந்துகொண்டு அதன்படி நடக்கும் ஒருவன் மற்ருெருவனை நாடி அவனுடைய ஸகாவாக இருக்க முயற்சிக்கிறுன் அந்த மற்ருெருவன் இவனைத் யஜிக்கிறுன் (அங்கீகரிக்காமல் உதைத்துத்தள்ளுகிறுன்.) அந்த மற்ருெருவன் சொல்லும் (குதர்க்க) வார்த்தைகளில் அணுவளவும் ஸத்யமோ, நியாயமோ இராது. ச்ருதி வாக்யங்களுக்கு விபரீதமாகவே அர்த்தம் செய்வான். ஏனென்ருல் அவன் தர்ம மார்க்கத்திலிருந்தும் நழுவியவன்.

இந்த மந்த்ரத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போம் சாயாணு சார்யாள் இதற்கு எழுதியுள்ள பாஷ்யத்தில் ஸகா என்ற பதத்துக்கு சிநேஹிதன் என்றும் பராவித்யையைத் தெரிந்து கொண்டு அப்யஸிக்கிறவன் என்றும் அர்த்தம் செய்திருக்கிருர்கள் ஸகா என்ற பதத்தை இதே இரண்டு அர்த்தங்களுடன் உபயோகித்து கிஷ்கிந்தா காண்டம் 18ம் ஸர்க்கத்தில் கீழே விழுந்த வாலியைப் பார்த்து ப்ரபு ஒரு ச்லோகத்தைச் சொல்லுகிருர்.

ஸுக்ரீவேண ச மே ஸக்யம்

லக்ஷ்மணேநயதாததா (26ம்ச்லோகம்) இவ்விரண்டையும் ஆராய்ந்து பார்ப்பதில் நமக்கு விளங்குவது என்ன? லக்ஷ்மணன் பரம மித்ரன் உத்தம ஸகா அதாவது பராவித்யையை தெரிந்து அப்யஸிக்கிறவன் பிரபு அந்த மித்ரனை அங்கீகரித்தவர். இந்த மந்த்ரம் ஸுக்ரீவனையும் வாலியையும் ஸம்பந்தித்த மந்த்ரமாதலால் நாம் ஊகிக்க வேண்டியதென்னே? சிநேக பாவத்துடன் நாடினவன் சுக்ரீவன் அவனைத்யஜித்தவன் வாலி என்பதாம். மித்ரபாவேன ஸப்ராப்தம் நத்யஜேயம் கதம்சந, என்று பிரபு யுத்த காண்டத்தில் சொல்லும் வாக்யமும் நமக்கு ஞாபகத்துக்கு வருகிறது. ஆனுல் சுக்ரீவனை லக்ஷ்மணனை ப்போன்ற ஸகா (மித்ரன்) என்று நாம் சொல்லல் பொருந்துமோ? பொருந்தும். எவ்விதம்? கவனிப்போம்.

சுக்ரீவன் பிரபுவினிடம் மித்ரபாவத்துடன் வந்து அபயம் தந்தருளவேண்டுமெனப்ரார்தித்து சரணுகதம் செய்து விட்டான். பிரபுவும் அதை அங்கீகரித்து விட்டார். இந்த சுக்ரீவன் போன்ற மனோபாவத்தையுடைய பக்தனைப்பற்றி பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கீதை 9ம் அத்யாயத்தில் என்ன சொல்லுகிருர்?

யே பஜந்தி து மாம் பக்த்யா மயிதே தேஷு சாப்யஹம் (29ம்ச்லோ) என்றும் அபிசேத்ஸுது ராசாரோ பஜதேமாம் அநந்யபாக். ஸாதுரேவ ஸமந்தவ்ய: (30ம்ச்லோ) என்றும் நமேபக்த: ப்ரணச்யதி (31ம்ச்லோ) என்றும் சொல்லுகிருர்,

இந்த ச்லோகங்களிலும் முன்பின் இருக்கின்றவைகளிலும் அடங்கியுள்ள கருத்து பின்வருமாறு:— எவனெருவன் ஈச்ரவனிடம் அநந்ய பக்திவைத்து சரணுகதம் செய்கிருனே அவனுடைய ஹ்ருதயத்தில் அந்த இச்வரன் புகுந்துபராவித்யை உபதேசித்து அந்த பராவித்யை ஒட்டின அனுஷ்டானங்களை அப்யஸிக்க செய்கிருர். ஆகையால் அவன் ஸாது. 4ம் அத்யாயத்தில் பகவான் குறித்துள்ள ஸாதுவே அவன். சீக்ரத்தில் தன் துராசாரங்களை ஒழித்து தர்மத்தில் சித்த முடையவனுய் நித்யமான தீயொழுக்கத்தினின்றும் ஒழிதலை அடைகிறுன். தேயாய்ச முன் வஸுவி சாச்யதமான மோக்ஷத்தை அடைகிறுன். மேலும் ஸ்ரீ ராமானுஜாசார்யாள் தம் வியாக்யானத்தில் ஸாது என்றதற்கு எனக்கு வேண்டியவர்களுக்குள் மிகவும் உயர்ந்தவன் என்று அர்த்தம் செய்து ஆகையால் அவனை யாரும் மரியாதை செய்ய லேண்டும். உத்தமஞானிக்கு ஸமானமானவன்........கௌரவம் பண்ண வேண்டியவன் அலக்ஷியம் பண்ணக் கூடாது (30ம்ச்லோ) அஹமபி தேஷு மதுத்க்ரஷ்டேஷ்விவ வார்த்தே அதாவது, நானும் அவன் விஷயத்தில் என்னைக் காட்டிலும் உயர்ந்த வனிடத்தில் போல் இருப்பேன் (29ம்ச்லோ) என்று ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுகிருர் என்று வெகு திவ்யமாய் விவரித்திருக்கிருர்.

ஆகையால் சுக்ரீவனை பிறவி லக்ஷ்மணனைப் போலவே மதிப்பார் என்பது முற்றிலும் பொருந்தும்.

இப்படிப்பட்ட ஸாதுவை பிரபு அங்கீகரித்தது போல், வாலி சுக்ரீவனை அங்கீகரித்தானு? இல்லை ஆகையால் வாலி பிரபுவுக்கு துஷ்க்ருதனே.

மேலே குறித்துள்ள மந்த்ரத்தின் பின் பாகத்தில் ஸகா (சிநேகிதன்) வை த்யஜித்தவனைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறது? அது பின்வருமாறு;

த்யஜிக்கிறவன் சொல்லும் (குதர்க்க) வார்த்தைகளில் அணுவளவும் ஸத்யமோ நியாயமோ இராது. ச்ருதிவாக்கியங்களுக்கு விபரீதமாகவே அர்த்தம் செய்வான் ஏனென்ருல், அவன் தர்மமார்க்கத்தினின்றும் நழுவினவன்

இது நமக்கு எதை ஞாபகப்படுத்துகிறது? 18-ம் ஸர்க்கத்தில் பிரபு வாலியை 'ஜாத்யந்தன்,' அதாவது, பிறவிக் குருடனுக்கு ஒப்பிட்டு, சாஸ்த்ரங்களுடைய சப்த ஞானம் அவனுக்கிருந்தபோதிலும் அவனுடைய கெட்ட நடவடிக்கைகளினுலும் கர்வத்தாலும், குருபக்தியின்மையாலும் அநுபவஞானம் இல்லாமற்போய், குருடன் குருடர்களுக்கு வழிகாட்டுவது போல் இருந்து சஞ்சரித்துக் கொண்டிருப்பதாக அவனுக்குச் சொல்வதையே இந்த விஷயத்தை நான் 'தர்ம சூக்ஷ்மம்' என்ற தலையங்கம் கொண்ட வ்யாஸத்தில் விவரித்திருக்கிறேன்.

மற்ருெரு ரிக் வேதமந்த்ரம்.

இந்த மந்த்ரம் வாலிக்கே உரித்தானது. 8ம் அஷ்டகம் 4ம் அத்யாயம் 1ம் வர்க்கத்தில் 5ம் மந்த்ரம் அது பின்வருமாறு:—

ப்ரியாதஷ்டானிமே கபிர்வ்யக்தாவ்யதூதுஷது
சிரோந்வஸ்யராவிஷம் நஸுகம் துஷ்க்ருதே
புவம் விச்வஸ்மாதிந்த்ர உத்தர:/

இந்த மந்திரத்தில்,, துஷ்கிருதே, என்ற பதம் இருப்பதைக் கவனிக்கவேண்டும்.

இதன் பொருள்:

கபி (வருஷா கபி) எனக்கு (பக்தர்கள்) செய்யும் பிரியமான ஆஜ்ய ஆகுதிகளைத்தடுத்துக்கொடுக்கிறுன். நான் சீக்கிரத்தில் அவன் தலையை வெட்டுவேன். கேடு செய்பவனுக்கு நான் சுகத்தைக் கொடுக்கமாட்டேன். இந்திரனுகிய நான் ஸர்வேச்வரன்.

கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

இந்த மந்திரத்தில் (இதர ராமாயண மந்த்ரங்களிலும்) ஸ்ரீ ராமரைக்குறிப்பது இந்த்ரன். வாலியைக்குறிப்பது கபி. இதற்கு முந்தின 4ம் மந்திரத்தில் வ்ருஷாகபி என்ற பெயர் காணப்படுப்படுகிறது. வ்ருஷாகபி என்றவன் இந்த்ரனுடைய குமாரன் என்று சாயணுசார்யாள் வியாக்யானம். ஸ்ரீ ராமர் வாலியை இந்த மந்த்ரத்தின் பிரகாரம் எவ்விதம் மதிக்கிருர்? என்ன சொல்லுகிருர்? வாலி துஷ்க்ருதன், அவனை நான் கொல்லுவேன், என்று சொல்லுகிருர். இதை நாம் கவனிக்கவேண்டும். பரித்ராணுய ஸாதூனும் விநாசாய துஷ்க்ருதாம்' என்பது ஸித்தமாகிறது.

காங்கிரஸின் நற்புத்தி உதயம்.

இந்தியாசட்டஸபை பஹிஷ்காரரத்து

வார்தாவில் கூடிய கார்யககமிட்டியானது தீர்க்கலோசனை செய்து இந்தியா சட்ட ஸபைக் கூட்டத்திற்கு காங்ரஸ் கக்ஷி மெம்பர்கள் போகவும் நடவடிக்கைகளில் கலந்துகொள்ளவும அநுமதிகொடுத்து அதன்படி அவர்கள் சென்று சட்டசபை விவாதத்தில் கலந்து கொண்டார்கள்.

இந்தியா சட்டஸபையில், சுக்கூர் அராஜ நிலைமை விஷயமாயும், ஸுபாஷ் போஸ் விஷயமாயும் வந்த அவஸரப்பிரேரேபணைகளை கனம் வைஸ்ராய் நிராகரித்து விட்டார்

ருமேனியாவில் பூகம்பம்

2 ஆயிரம் மரணம்

ருமேனியா தேசத்தில் சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட பயங்கர பூகம்ப விபத்துக் காரணமாக இரண்டாயிரம்பேர் இறந்து விட்டதாகத் தெரிகிறது. இத்தேசத்தில் ஸமீபத்தில் ராஜியப்புரட்சி யேற்பட்டு அரசன் ஒடிப்போனதும் இத்தேசம் ஜர்மன் அடிமையாயிருப்பதும் தெரிந்த விஷயமே!

தேவாலயமென்பது என்ன?

(ஜி. ஜானகிராமையர்)

(தார்மிக யுவர்சங்க உதவி காரியதரிசி, கோவிலூர்.)

தேவாலயமானது எங்கும் வியாபகராய் மறைந்திருக்குங் கடவுள், தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்யத்துடன் எழுந்தருளியிருக்கும், இடமாம்.

தேவாலயத்தில் செயற்பாலனவாகிய பிரதிஷ்டை, பூஜை, உற்சவ முதலாகிய கிரியைகள் எல்லாவற்றையும், விதிக்கும் நூல்கள் ஆகமங்கள் சிவாலயக்கிரியைகள் சைவாகமங்களிலும், விஷ்ணுவாலயக்கிரியைகள், வைஷ்ணவாகமங்களிலும், விதிக்கப்படும். ஆகமங்களை ஓதியுணர்ந்தவர்களே தேவாலயக்கிரியைகளைசெய்யவல்லவர்கள். தீக்ஷை பெற்றவர்களே ஆகமங்களை ஓதியுணர்தற்கு யோக்கியர்கள். பாவங்களை வெறுத்துப் புண்ணியங்களை செய்பவர்களால் ஈஸ்வர பக்தியும், குரு பக்தியும், அடியார் பக்தியும், உடையவர்களாய் உள்ளவர்களே தீக்ஷை பெறுதற்கு யோக்கியர்கள். ஆதலினால் நல்லொழுக்கமும், பக்தியும் உடையவர்களாய், தீக்ஷைபெற்றவர்களாய், ஆகமங்களை குருமுகமா ஓதியுணர்ந்தவர்களாய், ஆகமக்ரியைகளை மந்திரத்தோடும், பாவனையோடும் விதிப்படி செய்யப் பயின்றவர்களாய் உள்ளவர்களே தேவாலயக் கிரியைகளைச் செய்தற்கு யோக்கியர்கள். தீக்ஷையும், ஆகம உணர்ச்சியும், உடையவர்களேயாயினும், நல்லொழுக்கமும் பக்தியுமில்லாதவர்களாயின், அவர்களாற் செய்யப்படும் கிரியைகளினால்கடவுள் சாந்நியத்தியராகார் என்பது ஆகம நூற்றுணிவு.

தேவாலயக் கிரியைகள் காலந்தோறும், தவறாமற்சிரத்தையோடுசெய்யப்படுமாயின், உலகத்திலே காலந்தோறும் மழைதவறாமல் பெய்யும்; நெல் முதலாகிய வளங்கள் பெருகும்; ஆரோக்கியம் உண்டாகும்; அரசநீதிநடக்கும்; கல்வியறிவொழுக்கமும், சமய புத்தியும் தழைத்தோங்கும். தேவாலயக் கிரியைகள் சிரத்தையோடு, விதிப்படி செய்யப்படாதொழியின், உலகத்திலே மழையின்மையும், பஞ்சமும், மசூரிகை, விஷூசி முதலிய கொடு நோய்களும கன்னம், களவு, கொலை முதலிய தீத்தொழில்களுமே விருத்தியாகும். ஆதலினாலே, கோயிலதிகாரிகள் தேவாலயங்களைச் சிரத்தையோடு விதிப்படி சாவதானமாக நடத்தல் வேண்டும்.

திருமந்திரத்தில் கூறியிருப்பதை கீழேயிருப்பதை பார்த்தால் நன்கு விளங்கும்.

ஆற்றரு நோய் மிகு மவனி மழை குன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்களானவை
சாற்றிய பூஜைகடப்பிடிற்றானே.

முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத்தீங்குளவாரிவளங்குன்றுங்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினிக்
கென்னரு ணந்தி யெடுத்துரைத்தானே.

என்ற செய்யுட்படி தேவாலயந்தோறும் வித்தியாசாலை ஸ்தாபித்து, அதிலே பிள்ளைகளுக்குக் கருவி நூல்களையும், வேதம், ஆகமம் முதலிய நூல்களையும் கிரமப்படியே கற்பித்தல் வேண்டும். கற்ற பிள்ளைகளை பரீக்ஷித்து, அவர்களுக்குள்ளே அதிகசமர்த்தர்களாயும், நல்லொழுக்கமும் பக்தியும் உடையவர்களாயுள்ளவர்களையே தேவாலயத்துக்கு ஆசாரியர் முதலாயினோராக நியோகித்தல் வேண்டும். அவர்களுக்கு அன்னவஸ்திர முதலியவற்றின் பொருட்டு முட்டுபாடில்லாமற் பொருளதவி செய்து அவர்களைக் கொண்டு தேவாலயக்கிரியைகளை காலந்தோறும் தவறாமல் விதிப்படியே செய்வித்துக் கொண்டு வரல் வேண்டும். அவர்கள் தங்களுக்குரிய நல்லொழுக்கத்தினும் தேவாலயக்கிரியைகளினும் வழுவினார் களாயின் அவர்களைக் கண்டித்துத் திருத்தல் வேண்டும். திருத்த முறாதவர்களை நீக்கி விடல் வேண்டும்.

கடவுளுடைய குணமகிமைகளையும் புண்ணிய பாவங்களையும் அப்புண்ணிய பாவங்களின் பயனாகிய ஸுக துக்கங்களையும் கடவுளை வழிபடும் முறைமையையும் அவ்வழிபாட்டினாலே பெறப்படும் முக்தியின்பத்தையும் அறியும் அறிவு இல்லாத போது, தேவாலயத்தினாலே ஜனங்களுக்குச் சிறிதும் பயனில்லை. இவ்வறிவு இல்லாதவர்கள் தேவாலய சேவை செய்யப்புகினும், குளிக்கப்போய்ச்சேறு பூசிக் கொள்ளுவோர் போலப் பாவத்தையே சம்பாதித்துக் கொள்வார்கள்

ஜனங்களுக்கு பக்தி வளர்ந்தோங்கும் பொருட்டு, தேவாலயமெங்கும்வேத ஒலியும், தமிழ் வேதஒலியுமே தழைத்தோங்கும் படி செய்தல் வேண்டும். சைவர்களுக்குத் தமிழ் வேதம் தேவார திருவாசகங்கள். வைஷ்ணவர்களுக்குத் தமிழ் வேதம் நாலாயிரப் பிரபந்தம். அவரவர் வேதங்களை ஓதாதவர்கள் அந்தந்த மதத்தில் சேர்ந்தவர்களாகமாட்டார்கள்.

நல்லொழுக்கமும் பக்தியும் ஆகம உணர்ச்சியுமுள்ள பெரியோர்கள் கோயிலதிகாரிகளாய் இருப்பாராகின் அவர்கள் பழி பாவங்களுக்குப் பயந்து, தேவாலயத்தை சிரத்தையோடு விதிப்படி நடாத்திச் சமய பக்தியை வளர்ப்பார்கள். இவ் வியல்பில்லாதவர்கள் கோயிலதிகாரிகளாய் இருப்பார்களாயின், அவர்கள் தேவத் திரவியங்களைப் பெரும்பான்மையும் டம்பத்தின் பொருட்டும், தங்கள் குடும்பப் பாதுகாப்பின் பொருட்டும், வழக்கின் பொருட்டும், அதிகாரிகளை உபசரிதற் பொருட்டும், அவர்களுக்குக் கொடுக்கும் பரிதானத்தின் பொருட்டுமே செலவு செய்வார்கள்; தேவாலயத்தை ஈஸ்வர பக்தி வளர்தற்குச்சிறிதும் இடமாக்காது; காமம், குரோதம், மதம், மாற்சரியம், சண்டை, கொலை முதலியவை வளர்தற்கே இடமாக்கி விடுவார்கள். ஆகையால் மேற்சொன்ன செலவுகளினால் கிஞ்சிற்றேனும் பயன் பயக்காது. ஆதலால் நல்ல அறிவுடையோர் களாயிருந்தால் என்ன செய்யவேண்டும் என்றால், தேவாலயங்களை நல்லொழுக்கமும், பக்தியும், ஆகமவுணர்ச்சியு முடைய பெரியோர்களிடத்திலேயே ஒப்பித்தல் வேண்டும்.

கோயிலதிகாரிகள் தங்களுக்கு உரிய க்டைமையினின்று தவறினார்களாயின், அரசன் அவர்களைத் தண்டித்து நீக்கிவிடல் வேண்டும். அரசன் அப்படி செய்யாவிடத்து உலகத்தார் பலரும் ஒற்றுமையுடையவர்களாய்த் திரண்டு, அரசனுக்கு விண்ணப்பஞ் செய்து, அவ்வதிகாரிகளை நீக்குவிக்க முயலல் வேண்டும். இப்படிச் செய்யாதவர்கள் எரிவாய் நரகத்துக்கு இரையாகி, எண்ணில்லா காலம் வருந்துவார்கள்.

இதன் தொடர்ச்சியாய் "தேவாலய தரிசனம்" என்னும் கட்டுரை வெளியாகும்.

தார்மிக யுவக்சங்கம்

நாகநாதபுரம்.

காரைக்குடி.

இச்சங்கத்தின் சார்பாக ஐப்பசி-மீ 7-உ (23—10—40) புதன் கிழமை இரவு 8 மணிக்கு ஓர்பொக்கூட்டம் நடைபெற்றது அவ்வமயம் புருஷர்களும் ஸ்திரீகளுமாக அனேகம் பேர் கூடியிருந்தார்கள். முதலில் கடவுள் வாழ்த்து பாடியபின் கூட்டத்திற்கு மதுரை ஸ்ரீ வர்ணாஸ்ரம ஸ்வாஜ்ய சங்கத்தின்தலைவர் ஸ்ரீமான் N. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்களை தலைவராக ஏகமனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டது. சங்கக்காரியதரிசி சென்ற கூட்டத்தின் நிகழ்ச்சி வாசித்துமுடிந்தபின் தலைவர் அவர்கள் கேழ்வி முயல் என்ற விஷயத்தைப்பற்றி பேசும்பொழுது கல்வி கற்ற மாணாக்கர்கள் கல்வியினுடைய பெருமையைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு படித்தவர்களாகிய பெரியோர்களுடைய உபன்யாஸங்களைக் கேட்டுத்தான் தேற்சிபெற வேண்டுமென்றும், கேவலம் படிப்பினால் மாத்திரம் ப்ரயோஜனமில்லையென்றும், படித்தவர்கள் தானே புஸ்தகங்களைப் பார்த்து அதன் ரஸத்தைஅனுபவிப்பதைக்காட்டிலும்,பெரியோர்கள் மூலமாய் அதைக் கேட்பதில் ரொம்பவும் ருசி உண்டென்றும் வேதத்தில் பதத்திற்கும் ஸ்வரத்திற்கும் வெவ்வேறு அர்த்தம் வரலாமென்றும் ஆகவே படிக்காமல் படிப்தைவிடப் படித்துக் கேட்பது ரொம்பவும் விசேஷமென்றும், இந்தக்காலத்தில் ஸம்ஸ்கிருதத்தில் பூர்ண பாண்டித்யமில்லாமல் வேறு பாஷைகளில் மொழி பெயர்ப்பதும், அதற்கு அர்த்தம் சொல்வதும் சுத்த தவறு என்றும் தகுந்த ஆதாரங்களுடன் மிகவும் அழகாகவும், மிகவும் விரிவாகவும் பேசினார்கள்.

பிறகு இவ்வூர் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கக்காரியதரிசி திருவாளர் சே. வு. மெய்யப்ப செட்டியாரவர்கள் அதை ஆமோதித்து சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தலைவர் முடிவுரையில் இப்பொழுது சிலபேர்கள் உலகத்தில் நான்கு ஜாதிகள் தான் கடவுளால் ஸ்ருஷ்டிக்க பட்டதென்று சொல்லுகிறார்கள். கீதையில் நான்கு வர்ணங்களை உத்தேசித்துச் சொல்லவில்லையென்றும், மோக்ஷமார்க்கத்தினுடைய நான்கு படிகளாக வகுக்கப்பட்டிருக்கிறதென்றும் அதை அடைவதற்கு அவர்வர்களுடைய ஸ்வகர்மாவினால்தான் அடையமுடியுமென்றும் ஜாதியானது பிறப்பினால்தான் உண்டாகிறதென்றும் கர்மாவினால் இல்லையென்றும் தகுந்த உபமானங்களுடன் மிகவும் அழகாக உபன்யஸித்தார் பிறகு காரியதரிசி வந்தனோபசாரம் செய்ய கூட்டம் இனிது நிறைவேறியது. ந. நி.

ஆழ்வார் திரு[illegible]

கிராப்பு எடுக்காதவருக்குத் தீட்டு

ஆழ்வார்திருநகரியில் ஏற்கனவே ஒருவர் தமது பிதா மரணத்தில் கூட கிராப் எடுத்து ஸர்வாங்கவபநம் செய்து கொள்ளாத நிமித்தமாக தீட்டுள்ளவரென்று தீர்மானிக்கப்பட்டு கோவிலில் நுழையக்கூடாதென்று கக்ஷி யேற்பட்டதை தெரிவித்துள்ளோம். இப்போது கோவில் தேவஸ்தானம் கிளார்க் ஒருவர் தனக்குக்குழந்தை பிறந்த சூதகத்தில்கூட கிராப் எடுக்காமல் ஸர்வாங்கவபநம் செய்துகொள்ளாமல் கோவிலில் பிரவேசித்த காரணமாக சாஸ்திர விதிப்படி இவருக்குத் தீட்டு நீங்கவில்லை யென்று ஆக்ஷேபித்ததின் பேரில் ஷை கிளார்க் க்ராப் எடுத்து ஸர்வாங்க க்ஷவரம் செய்து கொண்டார். ந. வி. நி.

ஸ்ரீ வைதிக வர்த்தினீ ஸபா,

புதுக்கோட்டை

6-வது ஸூத்திய மண்டலத்ரிவேத பாராயணம்

இச்சபையினுதரவில் சென்ற வருஷங்களைப்போலவே 6-வது வருஷமான இவ் வருஷத்திலும் ரிக் (க்ருஷ்ண), யஜுஸ் (ப்ரச்னைக்ரம பாராயணமும் சாகையும்), ஸாம ஆகிய மூன்று வேதபாராயணமும் உடன் ஸ்ரீ சாந்தநாதஸ்வாமி ஸன்னிதானத்தில் நாளது விக்கிரம ஸு கார்த்திகை மீ 1௳ 16—11—40 சனிக்கிழமை முதல் மார்கழி மீ 16௳ (30—12—40) திங்கட்கிழமை முடிய ஒரு மண்டலத்திற்கு பிரதி தினம் மாலை 6-30 மணி முதல் 7-30 மணி வரை நடத்தப்படும்.

பிரதி தினம் ஷை பாராயணம் முடிந்தவுடன் யஜுர் வேதத்தில் அன்றுடம் பாராயணம் செய்யப்படும் ப்ரவசனத்தின் அர்த்தத்தையும்! அதன் விநியோகம் முதலியதுகளைப் பற்றியும் விஸ்தாரமாக ஸ்ரீ வித்வான் M. N. ராகவ சாஸ்திரிகள் அவர்களாலும், குடுமியாமலை பிருமஸ்ரீ தர்மஜ்ஞ பஞ்சாபகேச கனபாடிகள் அவர்களாலும், இன்னும் இதர பண்டிதர்களாலும் உபந்யஸிக்கப்படும்.

ஷை பாராயண சமாப்தி தினமான (30—12—40) திங்கட்கிழமை அன்று வழக்கம்போல் ஸ்ரீ வேதநாயகி ஸமேத ஸ்ரீ சாந்தநாதஸ்வாமிக்கு ஸ்ரீமஹந்யாஸ ஏகாதச ருத்ரஜப பூர்வமாக சங்காபிஷேக மஹாபிஷேகம் முதலியதும், விசேஷமாக பிராம்மண ஸந்தர்ப்பணையும் நடத்துவதாக உத்தேசித்திருக்கிறது.

ஆஸ்திகர்களனைவரும் ப்ரதிதினம வேத கோஷத்தை ச்ரவணம் செய்து, சென்ற வருஷங்களில் ஷை கைங்கர்யத்திற்கு பிரபுக்கள் அனைவரும் அநேக பிரகாரங்களாக உதவிபுரிந்தபிரகாரமே இவ்வருஷமும் உதவி புரியும்படி செய்வதன் மூலமாய் ஸர்வசக்தரான ஸ்ரீபரமேச்வரனுடைய பூர்ண ப்ரஸாதத்திற்கு பாத்திரர்களாக வேணுமாயும் பிரார்திக்கப்படுகிறது

ஜி. மலையப்ப சாஸ்திரி காரியதரிசி.

ஒரு பெரிய மஹானுடைய ஸமாதியில் சிவாலய நிர்மாணம்

ஆஹிதாக்னி வம்சத்தில் அவதரித்து— வேத வேதாங்காதி மந்த்ர சாஸ்த்ரங்களின் மர்மக்ஞராகயிருந்து க்ரஹஸ்தாச்ரமத்திற்குரிய-அக்னி உபாஸ்தியும் செய்துகொண்டு-ப்ரும்மக்ஞானிகளுடைய பரிபூர்ணனுக்ரஹத்தால் ஸ்ரீ வித்யை என்ற ப்ரும்ம வித்யோ பாஸனுஸார்வபௌம ஸாம்ராஜ்யாபிஷிக்தராகவுமிருந்து- ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாளுடைய நியமனத்தின் பேரில் ஸ்ரீகாஞ்சீபுரம் ஸ்ரீகாமாக்ஷி அம்பாளுடைய ஆலயத்தில் நித்ய- நைமித்திக விசேஷ தின பூஜா விதான தேசிகராய்இருந்து பூஜகர்களை பரிசீலனம் செய்து வந்தவராளான திவ்யாநந்த குருஸ்வாமிகள்- தக்ஷ பூஜஸாரங்க க்ஷேத்ரமென்னும்- வலங்கைமான் க்ராமத்தில் விஜயம் செய்து- பரமஹம்ஸாச்ரமம் வஹித்து ஸித்தியடைந்து வேத கோஷத்துடன் 500 ஜனங்கள் தெரிசிக்க ஸமாதியிலமர்ந்தார்கள்.

ஷை ஸமாதிஸ்தானத்தில் சிவாலய நிர்மாணம் செய்ய- ஷைமஹானுடைய ப்ரதம சிஷ்யரான திப்பருஜபுரம் மந்த்ரமூர்த்தி ப்ரும்மஸ்ரீ க்ருஷ்ண சாஸ்த்ரீ என்று ப்ரஸித்தனாமாவை உடைய புவனநந்தருடைய- ப்ரயத்தனத்தால்- ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்யாளுடைய விசேஷ த்ரவ்ய ஸஹாயானுக்ரஹத்தாலும் ஷைமந்த்ரமூர்த்தி சாஸ்த்ரிகளுடைய சிஷ்யவர்கத்தாருடைய த்ருவ்ய ஸஹாய கைங்கர்யத்தாலும் சிவாலயகெர்ப்பக்ருஹம் பூர்ண லக்ஷணத்துடன ஷப்பரு சிலவில நிர்மாணம செய்யப்பட்டு ஆவணி மீ 31௳ 15-9-40ல் கும்பாபிஷேகமும் தொடர்ந்து நித்ய பூஜையும் 31—10—40ல் மண்டலாபிஷேகமும் விமர்சையாய் நடைபெற்றது. இனியும் நித்ய பூஜை தவறாமல் நடக்கு மென்று எதிர் பார்க்கப்படுகிறது. ந. நி.

பல்லக்குச்சேரி

தேன்னுற்காடு

நாச்சியார் கோயில் லக்ஷ்மீ மந்திரம் ஸ்ரீ உபயவேதாந்த வித்வான் அபிநவ ஸரஸ்வதீவாங் முகரத்ந கோச: வித்வத் சிரோமணி பண்டிதராஜ குருவர்ய நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி இவ்வூரிலுள்ள சிஷ்ய கோடிகளின் கோரிக்கைப்படி விஜயம் செய்ததில் வாத்யகோஷ பூர்ண கும்பாதி மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டு ஸத்விஷயங்களைச் செய்து வருகிறார். இன்னாட்டில் மழையின்றி பயிர்களுக்கும் பசுக்களுக்கும் மிகவும் பிரயாஸமாகயிருப்பதை முன்னிட்டு 'லோகாஸ் ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து" என்றபடி உலக நன்மையை உத்தேசித்து ஸ்ரீ மன்மஹா பாரத விராட பர்வத்தைப்பிரவசனம் செய்யத் தொடங்கி சொன்னயம் பொருணயங்கள் மலியப் பெற்ற பல சுவை பொருந்திய உபந்யாஸாமுதத்தை இம்மஹான் வழங்கிவருவதற்கிணங்க, வருணபகவானும் இரங்கி மழை பொழிந்து ஏரியிலும் ஜலம்வந்து பூமியும் குளிர்ந்திருக்கிற வனப்பு கொண்டாடத்தகுந்தது. இந்த கிராமத்திற்கு ஸமீபத்தில் 'மணிமுத்தாநதி' என்னுமு சிற்றாறு இருமருங்கிலும் அழகிய கரும்பாறை வரிசை குண்டுகற்கள் நிறைந்து விளங்கும்.

ஸ்ரீமத்ராமாயணத்தில் கூறும் சம்புக உபாக்யானத்தை அனுஸரித்து சம்புகனுடையவும் ஸ்ரீ ராமானுடையவும் சிலாவிக்ரஹங்களும் அமைத்திருப்பதுடன் அதைக் குறிக்க சம்புக நதியும் பிரவஹிக்கிறதோடு முனிவர் பலர் மகிழ்ந்து புகழுமாறு பல்லக்கு மீதேறி காக்ஷிதந்தருளிய இராம பிரானின் பெருமையை இன்னுளில் நிரூபிக்கத் தக்க பல்லக்குச்ரேணி என்ற காரணப் பெயரமைந்த இவ்வூரின் மேன்மைக்கிணங்க ருஷிகள் சக்கிரவர்த்தித் திருமகனுரான இராமனை வணங்கினதைக் குறிப்பிடுமாறு "ருஷிவந்தியம்,, என்ற க்ஷேத்திரமுமிருப்பதும் இப்பல்லக்குச்சேரி அக்கிரஹாரத்திற்கு இணங்க ஆலயங்களும் ஸ்ரீ அபீஷ்ட வரதராஜஸ்வாமி பெருந்தேவித்தாயார் உபய நாச்சிமார் ஸமேதராய் ஸ்ரீ நாடாதூரம்மாள் வரத தேசிக வேதாந்த தேசிகேந்திர பூஜிதராகப் பொலிவுற்று ஒளிர்வதும். இவ்வித வைபவங்களை ஆராய்ந்து எடுத்துக்கூறி அருமை மொழி பொழியும் ஸ்ரீ நடாதூர் ஸ்வாமிகளின் பெருமையும் புகழக் கூடியது.

ஒ. நி.

பழூர்

ஓர் தார்மிகப் புரபுவின் வியோகம்

நாளது விக்ரம வருஷம் ஐப்பசி மீ 13௳ (29—10—40) செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு இவ்வூர் பிரபல தார்மிகரும் ரிடையர்டுடிபடி கலெக்டருமான ஸ்ரீமான் பி. ராமச்சந்திரய்யர், அவர்கள் தன்னுடைய 78-வது வயதில் இப்பௌதிக உடலைத்துறந்து எங்கும் வியாபகமான பரம்பொருளோடு ஐக்யமானர் ஸ்ரீமான் ஐயரவர்கள் கி. பி. 1872-வது இ. தி. தா. பழூரில் ஓர் உயர்ந்த குடும்பத்தில் பிறந்து 19-வது வயதில் திருச்சி எஸ். பி. ஜி. காலேஜில் பி. எ. பரீட்சையில் தேறி உடனேயே திருநெல்வேலி ஜில்லாவில் தாலூகா ஆபீஸில் ஸாமான்யமான குமாஸ்தா வேலையில் அமர்ந்து. கிரமமாக டிப்டி கலெக்டர் பதவி பரியந்தம் அடைந்து பல ஜில்லாக்களில் வேலை பார்த்து தன்னுடைய 55-வது வயதில் வேலையிலிருந்து ரிடையர் ஆகி தன் ஸொந்தக் கிராமமான பழூரிலேயே வாஸம் செய்து கொண்டு ஸதாசாரஸம்பன்னராய் அத்வைத வேதாந் தக்கிரந்தங்களை வாசித்துக்கொண்டு வேதாந்தபாடசாலையை ஆரம்பித்து வித்தியார்த்திகளை வாசிக்கச் செய்ததுடனில்லாமல் வேதபாடசாலை ஒன்றும் சிருகமணி கிருமத்தில் வைத்யசாலை ஒன்றும் ஸ்தாபித்து தன்னுடைய மேல் பார்வையிலேயே 8 வருஷமாக நடத்தி வந்தார் சில்லரையாக இன்னும் அநேகம் தர்மங்களையும் ஏற்பாடு செய்து ஷை தர்மங்களை சாசுவதமாக நடத்த வேண்டியதற்கு தர்ம சாஸனங்களையும் செய்து வைத்திருக்கிறார்.

இம்மஹானின் வியோகம் தார்மிக ஸமுதாயத்திற்கே பெருத்த துக்கத்தை விளைவிக்குமென்பதில் ஐயமில்லை. (ந-நி)

சங்கரகுரு பரம்பரை 1 0 0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

Printed by S. Kalyansundarm, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam

Published by A. Gopladesikachariar, and S. Kalyanasundaram.